**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.247/2025**

**நாள் : 15.04.2026**

**எ.ம.சா.** 1 (எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சிவராமகிருஷ்ணன் | மாவட்டம் | : | கிருஷ்ணகிரி |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.ராஜமாணிக்கம் | வயது | : | 35 |
| ஊர் | : | ஊத்தங்கரை | தொழில் | : | அரசு பேருந்து ஓட்டுநர் |
| வட்டம் | : | கிருஷ்ணகிரி | தேசியம் | : | இந்தியன் |

நான் இந்த வழக்கில் எதிர்மனுதாரரான அரசு பேருந்து ஓட்டுநர் ஆவேன். விபத்து சமயத்தில் அரசு பேருந்தை ஓட்டி வந்தவர் என்ற முறையில் வழக்கு விவரங்கள் எனக்கு பரிட்சயம். இந்த வழக்கிற்கான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

விபத்து சமயத்தில் TN 29 N 2947 என்ற அரசு பேருந்தை ஓட்டிச் சென்றேன் என்றால் சரிதான். விபத்தானது இரவு 9.50 மணியளவில் நடந்தது. கந்திலி காவல் நிலையத்தில் எனக்கு எதிராக குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சாலை இருவழிச்சாலை என்றால் சரிதான். அந்த சாலை அகலமானது என்றால் சரிதான். ஆட்டோவானது

கிழக்கிலிருநது மேற்கு நோக்கி சென்றது என்றால் சரிதான். நான் அதற்கு எதிர் திசையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்தேன் என்றால் சரிதான். நான் மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கி வந்தேன் என்றால் சரிதான். ஆனால் விபத்தில் இறந்தவர் பள்ளத்திலிருந்து மேட்டை நோக்கி சென்றார் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் ஆட்டோ டிரைவர் குடிபோதையில் இருந்ததாக இந்த வழக்கிலிருந்து தப்பிக்கவேண்டி தவறாக சாட்சியம் அளிக்கிறேன். ஆட்டோவில் 9 நபர்கள் பயணித்ததாக உண்மைக்கு புறம்பாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து எனது அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் ஓய்வு இல்லாததால் தூக்க கலத்தில் இருந்தேன் என்றால் சரிதான். சாட்சி பின்னிட்டு இல்லை என்று கூறுகிறார். விபத்து எனது அஜாக்கிரதையால் ஏற்பட்டதால் மனுதாரர்களுக்கு எங்களது நிறுவனம் நஷ்டஈடு கொடுகக கடமைப்பட்டது என்றால் சரியல்ல.

**3ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

கந்திலி காவல் நிலையத்தில் எனக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு திருப்பத்தூர் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றித்தில் வழக்கு நடந்து வருகிறது என்றால் சரிதான். ஷேர் ஆட்டோவின் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுததியதாக சொல்வது தவறு என்றும், விபத்து என்னுடைய அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனவே மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. ஆட்டோ ஓட்டுநர் குடிபோதையில் இருந்ததாக சொல்வது உண்மைக்கு புறம்பானது என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி(FAC),
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.